காரணத்தினால், வெளி நாட்டு நாணயத்தை சேமிக்கலாம் என்ற முறையிலாவது, அனுமதி கொடுப்பதற்கு சர்க்கார் மீண்டும் புனராலோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன். இந்தக் கேள்வியில் கேட்கப் பட்டிருப்பது செங்கீரைக் காட்டுப் பகுதியில் உள்ள செங்காலிக் கற்களை குத்தகைக்கு விடும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையி லுள்ளதா என்பது தான். ஏற்கனவே புதுக்கோட்டை சமஸ்தானத்தின் மூலம் கருப்பையா அம்பலம் என்பவருக்கு நீண்ட கால குத்தகைக்கு (பெர்பெச்சுவல் லீஸ்) விடப்பட்டது. திருச்சி மாவட்ட கலெக்டர் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்து, அவரை வெளியேற்ற முடியுமா என்பதுபற்றி வழக்கறிஞர், நிபுணர்கள் ஆலோசனை பெற்று வருகிறார். மேற்கொண்டும் நிபுணர் ஆலோசனை பெறவேண்டிய காரணத்தினால், இப்பொழுது அந்த ஒப்பந்தம் அப்படியே இருக்கிறது. அவருக்கு அதிக லாபம் வருகிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு ரூ. 34 கொடுக்கிறார். அவருக்கு ஒரு ஆண்டுக்கு ரூ. 10,000 இலாபம் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. அதை எடுத்துக்கொள்வது பற்றி இப்பொழுது சட்ட இலாகா ஆலோசனை நடத்திக்கொண்டிருக்கிறது. ஆலோசனை முடிந்ததற்குப் பின்னால் ஒரு முடிவு எடுக்கப்படும்.

மாயூரம் கூட்டுறவு நூற்பாலை தொழிலாளர்கள்

*508 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) மாயூரம், மணல்மேட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலையில் 1969-ம் ஆண்டு வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்கள் அவ்வாறு நீக்கப்பட்டதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:

(அ) மாயூரம், மணல்மேட்டில் உள்ள தஞ்சை மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலையில் 1969-ம் ஆண்டில் 10 தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்.

(இ) (1) 1966-ஆம் ஆண்டில் இவ்வாலையில் ஏற்பட்ட கதவடைப்பை அடுத்து, மூன்று தொழிலாளர்களுக்கு வேலை மறுக்கப்பட்டது.

(2) சிக்கன நடவடிக்கை காரணமாக, ஒருவர் ஆட்குறிப்பு செய்யப்பட்டார்.

(3) கொடுத்த வேலையைச் செய்ய மறுத்ததற்காக, ஒருவருக்கு வேலை மறுக்கப்பட்டது.

1970 மார்ச் 23]

(4) குறிப்பிட்ட அளவு வேலையைச் செய்யாத காரணத்திற்காக ஒருவருக்கு வேலை மறுக்கப்பட்டது.

(5) பதவிக்கால அளவு முடிவடைந்ததன் மேல், இரண்டு தொழிலாளர்களுக்கு வேலை மறுக்கப்பட்டது.

(6) எஞ்சியுள்ள இரண்டு தொழிலாளர்களைப் பொறுத்த மட்டில், அரசிடம் தகவல் எதுவும் இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மணல்மேடு பஞ்சாலைத் தொழிலாளர்கள் நீக்கப்பட்டது, அவர்கள் தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக வேண்டுமென்றே அந்த ஆலை நிர்வாகம் அவர்களைப் பழிவாங்கினார்களா . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன காரணத்திற்காக என்று வேண்டுமானால் கேளுங்கள். காரணத்தைக் கூட அமைச்சர் அவர்கள் சொல்லி விட்டார்கள்.

திரு. என். கிட்டப்பா : அப்படி அந்தத் தொழிலாளர்கள் நீக்கப்பட்டதற்கு அரசியல் காரணம் ஏதேனும் உண்டா? மீண்டும் பரிசீலித்து, பழி வாங்கப்பட்ட தொழிலாளர்கள் 10 பேர்களுக்கும் வேலை வாய்ப்பை உருவாக்கி தருவதற்கு இன்றைய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்னால் 1966-ல் நடைபெற்ற சிக்கலை ஒட்டி, இந்த வேலை இழப்பு நடவடிக்கைகள் நடந்தன. இப்பொழுது இந்த 10 தொழிலாளர்களில் நான்கு பேர்களை மீண்டும் வேலையில் அமர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கை இந்த அரசாங்கம் மேற்கொண்டு, தொழிலாளர் நலத் துறையின் மூலமாக அவர்கள் வேலைக்குச் செல்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மீதி நான்கு பேர்களைப் பற்றிய பிரச்சினை நடுவர் தீர்ப்பிற்கு விடப்பட்டிருக்கிறது. மீதி இரண்டு பேர்களைப் பற்றிய பிரச்சினையை இப்பொழுது நாங்கள் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். கீழே இருக்கிற லேபர் ஆபீசர்களிடமிருந்து அறிக்கை வரவில்லை.

திரு. கொடைவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி: இந்த நூற்பு ஆலையில் வேலையிலிருந்து நீக்கப்பட்ட சிப்பந்திகளுக்கு மாற்று வேலை அளித்து, அதற்கு அவர்கள் மறுத்த காரணத்தினால், நீக்கப்பட்டார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அப்படி அவர்கள் மாற்று வேலையை ஒத்துக்கொள்வதாயிருந்தால், சர்க்கார் மறுபடியும் இவர்களை வேலையில் அமர்த்துவது பற்றி பரிசீலனை செய்வதற்கு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, முதலில் நீக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்ததால், முதலில் 9 பேர்களைப்பற்றிய பிரச்னை நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டு, அவர்களுக்கு நியாயம் கிடைக்கும் என்ற நிலை இருக்கிறது.

1969-ம் ஆண்டை பொறுத்தவரையில், 10 பேர்கள் மீது வழக்குகள் இருந்தன. நான்கு பேர்களை நிர்வாகம் எடுத்துக்கொள்வதாக இப்பொழுது கூறி, எடுத்துக்கொண்டிருக்கிறது. மீதி இருக்கிற 6 பேகளைப் பற்றி தான் இப்பொழுது பிரச்சினை. இதில் நான்கு பேர்களைப் பற்றிய பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு அனுப்பியிருக்கிறோம். இன்னும் இரண்டு பேர்களைப் பற்றி இன்னும் அறிக்கை வரவில்லை. அறிக்கை வந்தபிறகு அவர்களைப் பற்றிய பிரச்சினையையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன்: வேலையிலிருந்து நீக்கப் பட்டவர்களில் 10 தொழிலாளர்களில் நான்கு பேர்களை எடுத்துக் கொண்டதற்குப் பிறகு, மற்ற 6 பேர்களையும் எடுத்துக்கொள் வதற்குப் பதிலாக, மூன்று விதமாக தரம் பிரித்து இருக்கிறார்களே, இதில் ஏதாவது அரசியல் காரணம் உண்டா என்பதை விளக்க முடியுமா?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, அதனால்தான் முதலிலேயே நான் கூட தரம் பிரித்து, அவர்களைப் பற்றிய பிரச்சினை என்ன நிலையில் இருக்கிறது என்று பதில் சொன்னேன். ஒவ்வொருவர் பேரிலும் தனித்தனியாக வழக்குகள் இருக்கின்றன. நிர்வாகம் அவர்கள் பேரில் கிரிமினல் வழக்கு பெண்டிங்காக இருக்கிறது, நடந்துகொண்டிருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆகவே தான், இதை முழு அளவில் டிடைல்டாக விசாரிக்க வேண்டும் என்ற காரணத்தினால், நடுவர் தீர்ப்புக்கு நாம் அனுப்பியிருக்கிறோம்.

திரு. ஆர். நாகசுந்தரம்: இந்த மாயூரம் மணல்மேட்டிலுள்ள கூட்டுறவு நூற்பு ஆலையில் யாரேனும் சட்டமன்ற உறுப்பினர் நிர்வாகஸ்தராக நியமிக்கப் பட்டிருக்கிறாரா?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: இது தொழில் அமைச்சரைக் கேட்கவேண்டிய கேள்வி.

வெளிக்குறியிடாத வினாக்கள்.

Cases registered under Suppression of Immoral Traffic Act.

1 *Q.*—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

The number of cases registered under the Suppression of Immoral Traffic Act in the year 1964 to 1969 up to 31st October in the City of Madras, year-war?